விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 208 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 31 புதன்கிழமை (15.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## செம்மணி மனிதப் புதைகுழி



# அகழ்வுப் பணி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் 3ஆம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் இன்று புதன்கிழமை காலை ஆரம்பிக்கப்படவுள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில்

# புற்றுநோயாளர்களுக்கான புதிய விடுதி திறப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில்

# சிறை உத்தியோகத்தர் மீது கைதி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் விளக்கமறியல் கைதியொருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான சிறைச்சாலை உத்தியோகஸ்தர் சிகிச்

15ஆம் பக்கம் பார்க்க

# பூநகரியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(கண்டாவளை)

பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10.00 மணியளவில் பூநகரி பள்ளிக்குடாச் சந்திப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞரும்

15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தலை

# விரைவில் நடத்துவதே அரசின் எதிர்பார்ப்பு



## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நிதிப் பிரச்சினை இல்லை. தேர்தலை விரைவில் நடத்துவதே அரசின் எதிர்பார்ப்பு என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்துக்குப் பயப்படவில்லை

## முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உண்மையில் யுத்தத்திற்குப் பயப்படவில்லை என முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு அண்மையில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

16ஆம் பக்கம் பார்க்க

# எத்தனை கூட்டணிகளை அமைத்தாலும் அநுர அரசாங்கத்தை அசைக்க முடியாது

## தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டணி தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

எத்தனை கூட்டணிகளை அமைத்தாலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அசைக்கமுடியாது என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டட திறப்பு விழாவிற்கு நேற்று வருகை தந்த அமைச்சரிடம் தமிழ் - முஸ்லிம் கட்சி

15ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.சிறை வளாகத்தில் 'ட்ரோன்' பறக்கவிட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சிறைச்சாலை வளாகத்தின் மேல் 'ட்ரோன்' பறக்கவிட்ட குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாண சிறைச்சாலை வளாகத்தின் மேல், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வேளை 'ட்ரோன்' பறந்துள்ளது.

அதனை அவதானித்த சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் அது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

04ஆம் பக்கம் பார்க்க

# பிரதமர் ஹரிணி கட்டார் பயணம்

(கொழும்பு)

மறைந்த கட்டார் நாட்டின் முன்னாள் அமீர் ஷேக் ஹமத் பின் கலீஃபா அல் தானிக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக, பிரதமர் ஹரினி அமரசூரிய நேற்று (14)

15ஆம் பக்கம் பார்க்க

## நீர்கொழும்பு சிறை வன்முறை

# 200 பேரிடம் வாக்குமூலம் 7 குழுக்கள் விசாரணை

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் (STF) உள்ளிட்ட சுமார் 200 பேரிடம் இதுவரை வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேலைவாய்ப்பு

அரசியல் விஞ்ஞானம் கற்கை கற்ற ஆய்வுகள் தொடர்பாகவும் சட்ட ஆய்வு தொடர்பாகவும் புத்தக வெளியீட்டில் ஆர்வமும் அனுபவமும் உள்ள நபர்கள் தேவை.

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் :

**076 222 7817**

(5080)


## விரைவில்...

நேற்று(14) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபை தேர்தலுக்கு நிதி ரீதியாக எந்தப் பிரச்சினையும் இல்லை தற்போதைய பிரச்சினை தேர்தல் முறையே ஆகும். புதிய தேர்தல் முறை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, டித்வா அனர்த்தம் காரணமாக மாகாண சபை தேர்தலை நடத்த முடியாது எனவும், தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதி இந்த அனர்த்த நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இந்த கூற்றை நிராகரித்து அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, டித்வா அனர்த்த நடவடிக்கைகளுக்காக 500 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அந்த 500 பில்லியன் ரூபாயில் இதுவரை சுமார் 260 பில்லியன் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாகவும், அந்த அனர்த்தத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இன்னும் மீதி உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு இந்த அனர்த்த நிலைமை பாதிப்பை ஏற்படுத்தாது எனக் கூறிய அமைச்சர், நாட்டில் அவசரத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டாலும் அதற்கான நிதியை ஒதுக்கும் திறன் உள்ளது என்பதை சுட்டிக் காட்டினார். (ம-7)


## மணிவிழா வாழ்த்தும் சேவைநயப்பும்





திருமதி
சிவநங்கை
உருத்திரமூர்த்தி
SLTEAS 1

தங்களின் 33 வருட சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி – ஆசிரியர் : 1993.01.11 – 2010.12.31

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் – ஆசிரிய ஆலோசகர் : – 2011.01.01 2026.07.14

வாழ்த்துவோர் : நலன்புரிக் கழகம்
தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம்
சாவகச்சேரி

(2521)



## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இல் 3 பரப்பும், 6.5 குழியும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**076 393 7043**

(C-533)



## துயர் பகிர்கிறோம்



எமது நன்னடத்தை உத்தியோகத்தர் சங்க அங்கத்தவரும் கரவெட்டிப் பிரிவு நன்னடத்தை உத்தியோகத்தருமான **திருமதி அகிலா சசிகாந்தன்** அவர்களின் பாசமிகு தந்தை

**கணபதிப்பிள்ளை குகதாசசிங்கம்**


அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 02.08.1948 மறைவு 13.07.2026

**நன்னடத்தை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாணம்.**

(2519)


# மரண அறிவித்தல்



தோற்றம் 05.01.1957 மறைவு 14.07.2026

## சுந்தரம்பிள்ளை கருணாகரன்

(மணியகாரர் - ஈழத்துச்சிதம்பரம், முன்னாள் உரிமையாளர் - கருணா கபே)

காரைநகர் சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நீலிப்பந்தனை, காரைநகர் மற்றும் கொக்குவில், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கருணாகரன் அவர்கள் நேற்று (14.07.2026) செவ்வாய்க்கிழமை அன்று திண்ணபுரத்தான் திருக்கழல்களில் நித்திய இளைப்பாறுதலை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - ஈஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், சுந்தரேஷ்வரியின் அன்புச் சகோதரனும், பிரணவன் (நெதர்லாந்து), சுபாநந்தி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெசிக்கா (நெதர்லாந்து), பிரதீபன் (iStock mobile shop – நாச்சிமார் கோவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தகுமாரி, வசந்தகுமாரன் (நெதர்லாந்து), கோமதி, சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தங்கராசா, சுமதி, உதயணன், ஸ்ரீசுந்தராஜா ஆகியோரின் சகலனும், ஆத்விக், ஆதித், அவினாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், துளசி, ரவிராசா, கிருஷ்ணராசா, ஸ்ரீகணா ஆகியோரின் சித்தப்பாவும், பிரியங்கா, சுஜிந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2026) வியாழக்கிழமை காலை 05.00 மணியளவில் 59/3, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


(2520)

தகவல் : குடும்பத்தினர்

பிரணவன் (மகன்) - 071 717 8783
பிரதீபன் (மருமகன்) - 077 117 8783
வசந்தன் (மைத்துனர்) - 076 544 2324

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# 70ஆயிரத்தை நெருங்கும் டெங்கு நோயாளர்கள்



**(கொழும்பு) நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவல் புதிய உச்சத்தைத் தொட்டுள்ள நிலையில், இந்த ஆண்டில் இதுவரை பதிவான மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தை நெருங்கியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரையிலான உத்தியோகபூர்வ தரவுகளின்படி, கடந்த ஜூலை 12 ஆம் திகதி வரை நாட்டில் 68,672 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த நிலையில், ஜூலை 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஒரே நாளில் மட்டும் 1,279 புதிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதன் மூலம் இந்த ஆண்டில் நாடளாவிய ரீதியில் பதிவான ஒட்டுமொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 69,951 ஆக அதிகரித்துள்ளது.

ஜூலை மாதத்தின் முதல் 13 நாட்களில் மட்டும் நாடளாவிய ரீதியில் 14,572 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமை டெங்கு பரவலின் தீவிரத்தை காட்டுகிறது.

இந்த ஆண்டில் இதுவரை ஜூன் மாதத்திலேயே மிக அதிகமாக 21,538 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர்.

நாட்டின் ஒட்டுமொத்த டெங்கு பாதிப்பில் வழக்கம் போல மேல் மாகாணமே மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இம் மாகாணத்தில் இதுவரை 33, 127 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்திலேயே மிக அதிகமாக 14,464 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

காலநிலை மற்றும் தற்போதைய வானிலை மாற்றங்களினால் டெங்கு பரவல் மிக வேகமாக அதிகரித்து வருவதால், பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறங்களில் நீர் தேங்காதவாறு துப்பரவுப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என சுகாதார அதிகாரிகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுவது அவசியமாகும். (நி)

# தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது

## மத்தும பண்டார சுட்டிக்காட்டு



(கொழும்பு) நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் கூறுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. இன்று இந்த நாட்டில் சிறைச்சாலை அதிகாரிகளின் உயிருக்கு கூட பாதுகாப்பு இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வரலாற்றில் என்றுமில்லாதவாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கே தங்களது கடமைகளைச் செய்ய முடியாத அளவிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதுவரை 10 சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர். கடந்த காலத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரைக் கொலை செய்த மோசமான வரலாற்றைக் கொண்ட இந்த அரசாங்கத்திற்கு இவ்வாறான கொலைகள் புதிய விடயமல்ல.

அண்மைக் காலத்தில் நாட்டின் பல இடங்களிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதுடன், நாட்டின் வரலாற்றில் மிக அதிகமான கொலைகள் ஜே.வி.பி மற்றும் என்.பி.பி அரசாங்கக் காலத்திலேயே இடம்பெற்றுள்ளன.

தற்போது வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் செய்வது நிறுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம், கடந்த காலங்களில் அத்தகைய ஆர்ப்பாட்டங்களைச் செய்து எந்தவொரு அரசாங்கத்தையும் வேலை செய்ய விடாமல் தடுத்தவர்கள் இவர்கள்தான் என்பதுதாகும்.

போதைப்பொருள் ஒழிப்பு என்ற பெயரில் பலரைக் கைது செய்து சிறையில் அடைத்தாலும், சிறைச்சாலைகளின் உள்ளே இருக்கும் வசதிகள் குறித்து அரசாங்கம் எவ்வித கவனமும் செலுத்துவதில்லை. தற்போதைய சிறைக் கைதிகளில் மூன்றில் இரண்டு பங்கினர் போதைப்பொருள் விவகாரங்களுடன் தொடர்புடையவர்களாவர்.

வெறுமனே சிறையில் அடைப்பதன் மூலம் மட்டும் போதைப்பொருள் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. சிறைகளுக்குள் 3 அல்லது 4 கிராம் போன்ற சிறிய அளவிலான போதைப்பொருள் வழக்குகளுடன் தொடர்புடைய சாதாரண நபர்களே அதிகமாக உள்ளதாக சிறைக்கைதிகளுடனான கலந்துரையாடல்களின் மூலம் அறிய முடிகிறது.

மாறாக, பெருமளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பெரிய புள்ளிகள் யாரும் இன்னும் சிறைகளில் இல்லை. வெளிநாடுகளில் இருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை நாட்டுக்கு கொண்டுவரப்போவதாகக் கூறி அரசாங்கம் போலியான காட்சிகளை மாத்திரம் நடத்துகிறதே தவிர, நாட்டில் போதைப்பொருள் புழக்கத்தில் எந்தவொரு குறைவும் ஏற்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி)

# 6 கிலோ போதைப்பொருளுடன் பிலிப்பைன்ஸ் நாட்டவர் கைது

(கொழும்பு) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 6 கிலோ 180 கிராம் எடையுடைய குஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 63 வயதுடைய பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

விமான நிலையத்தின் வருகைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, நேற்று அதிகாலை வேளையில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் தற்போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவின் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அப்பிரிவினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# இலங்கையில் விரைவில் பயணிகள் ட்ரோன் சேவை



(கொழும்பு) மேம்பட்ட வான்வழிப் போக்குவரத்துத் தீர்வுகள் குறித்த ஆய்வுகளின் ஒரு பகுதியாக, இலங்கையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் ட்ரோன்களை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையகம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் பயணிகள் ட்ரோன்களை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடும் முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஏற்கனவே தொடங்கியுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் தமிந்த ரம்புவெல்ல தெரிவித்தார்.

ஒவ்வொரு ட்ரோனும் ஆறு பயணிகள் வரை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டதாக இருக்கும் என்று அவர் கூறினார்.

சீனா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் இது போன்ற பயணிகள் ட்ரோன் சேவைகள் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வருவதாகவும், பரவலான பயன்பாட்டைக் கருத்தில் கொள்வதற்கு முன்னதாக ஒரு முன்னோடித் திட்டத்தின் மூலம் இத் தொழில்நுட்பத்தை மதிப்பீடு செய்ய இலங்கை எதிர்பார்ப்பதாகவும் தமிந்த ரம்புவெல்ல குறிப்பிட்டார். (நி)

# சுரேஷ் சலே தாக்கல் செய்த மனு ஒத்திவைப்பு



(கொழும்பு) தன்னைத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு எதிராக அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே தாக்கல் செய்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குறித்த மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவிட்டுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளராகப் பணியாற்றிய சுரேஷ் சலே, தன்னைத் தடுத்து வைத்து விசாரணை செய்யும் உத்தரவை வலுவிழக்கச் செய்யுமாறு கோரியே இந்த மனுவைச் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்.சிறை...

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் "ட்ரோனை" பறக்க விட்ட இளைஞனைக் கைது செய்ததுடன் ட்ரோனையும் பொலிஸார் கைப்பற்றி இருந்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்படும் பாலங்கள் தொடர்பில் காணொளிகளைப் பதிவு செய்வதற்காக, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைக்கு அருகில் வீதியில் அமைக்கப்படும் பாலத்தை காணொளி எடுத்ததாகவும் தெரிவித்தார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## 5 ஆவது தடவையும் கிண்ணத்தை சுவீகரித்தது மட்டுவில் மின்னல் அணி




(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச ரீதியாக நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் மட்டுவில் மின்னல் அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மட்டுவில் மின்னல் அணியை எதிர்த்து நாவற்குழி சான் றோர் அணி மோதியது.

முதலில் துடுப்பாடிய மட்டுவில் மின்னல் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பில் பிரவீன் 47 ஓட்டங்களையும் தனுசிகன் 43 ஓட்டங்களை யும் அதிகபட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் நாவற்குழி சான்றோர் அணி சார்பில் கெவின் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நாவற்குழி சான்றோர் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 80 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

அவ்வணி சார்பில் சதானந்த் 40 ஓட்டங்களையும் கெவின் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் மட்டுவில் மின்னல் அணி சார்பில் சங்கீதன், பிரவீன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இதனால் மட்டுவில் மின்னல் அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்ததோடு குறித்த சுற்றுப் போட்டியில் தொடர்ச்சியாக 5 வருடங்கள் சம்பியனாகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-90)

## மட்டக்களப்பில் சமூக வலுவூட்டல் திட்டத்தை ஆரம்பித்தது டேவிட் பீரிஸ் குழுமம்

David Pieris Group Social Empowerment Drive

சமூக மேம்பாடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூக முன்னேற்றத்திற்கான தமது நீண்டகால அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், டேவிட் பீரிஸ் குழுமம் 5 நாட்கள் 'சமூக வலுவூட்டல் திட்டம் - மட்டக்களப்பு' எனும் பரந்த சமூக நலன்புரி திட்டத்தை 2026 ஜூலை 15 - 19 வரை முன்னெடுக்கவுள்ளது.

இந்நிகழ்ச்சியானது மட்டக்களப்பு, திருகோணமலை வீதியில் அமைந்துள்ள டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (DPMC) நிறுவனத்திற்குச் சொந்தமான வளாகத்தை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ளதுடன், மேலும் பல செயற்பாடுகள் நகரின் ஏனைய இடங்களிலும் இடம்பெறவுள்ளன.

ஒரு முழுமையான சமூக வலுவூட்டல் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டம், தொழில்முனைவோருக்கு ஆதரவளித்தல், வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்தல், தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப திறன்களை ஊக்குவித்தல், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக உதவித் திட்டங்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுவூட்டுதல், சமூக ஈடுபாட்டை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல்வேறு செயற்பாடுகளை கொண்டுள்ளது.

இந்த திட்டத்தின் முக்கியமான விடயங்களில் ஒன்றாக 5 நாட்கள் வர்த்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. இது ஜூலை 15 - 19 வரை DPMC வளாகத்தில் பொதுமக்களுக்காக காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இதனுடன் இணைந்து, East Lagoon ஹோட்டலில் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றும் நடத்தப்படும்.

அத்துடன் DPMC வளாகத்தில் பெண்கள் மேம்பாட்டுத் திட்டமும் இடம்பெறவுள்ளது. இது, அழகுக்கலைத் துறையில் பெண்களுக்கு நடைமுறை அறிவையும் திறன்களையும் வழங்குவதன் மூலம் அவர்களை மேம்படுத்துவதோடு, பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளையும் ஊக்குவிக்கும்.

ஜூலை 16 அன்று, திருகோணமலை வீதியில் உள்ள DPMC வளாகத்தின் முன்பாக வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்படும். இது பொறுப்பான சாலை நடத்தை மற்றும் பாதுகாப்பான பயணப் பழக்கவழக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஜூலை 18 அன்று, "பஜாஜ் தினம்" கொண்டாடப்படும். அன்றைய தினம் DPMC வளாகத்தில் இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கான போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சியின் இறுதி நாளான ஜூலை 19 அன்று, கல்லடி, புதிய கல்முனை வீதி, சிவானந்த தேசியப் பாடசாலை மைதானத்தில் விளையாட்டு மற்றும் சமூகப் பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கில் கிரிக்கெட் போட்டியும் மற்றும் வாழைச்சேனையில் கால்பந்தாட்டப் போட்டியும் நடைபெறும். அதே நேரத்தில், DPMC முகவர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேலும் வலுப்படுத்துவதற்காக, DPMC வளாகத்தில் அவர்களுக்கான இயந்திரவியல் பயிற்சித் திட்டம் நடத்தப்படும்.

இந்த சமூக வலுவூட்டல் திட்டமானது, சமூகங்களில் முதலீடு செய்வதன் மூலம் வணிகச் செயல்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையான மதிப்பை உருவாக்கும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் தொலைநோக்குப் பார்வையைப் பிரதிபலிக்கிறது.

மேலதிக விபரங்களுக்கு 0777 445 610 அல்லது 0778 675 439 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது https://web.facebook.com/davidpierisgroup டேவிட் பீரிஸ் குழுமத்தின் Facebook பக்கத்தைப் பார்வையிடவும்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3380

**மாதுரி**

உங்க கணவருக்கு என்ன ஆச்சு?
ஏன் ஒரு மாதிரி இருக்கார்?
போன வாரம் சளிப் பிரச்சினைக்கு
உங்ககிட்ட வந்தாரு... நீங்க "ஆவி"
பிடிக்க சொன்னீங்கன்னு நாலு நாளா
சுடுகாட்டுக்கு போயிட்டு வந்தார் டாக்டர்!



**வைஷாலினி**

கணவன்:நீ சாப்பாடு போடாம இப்படியே
சீரியல் பார்த்துக் கொண்டு இருந்தாய்னா,
நான் தூக்குல தொங்கிடுவேன்.
மனைவி: அப்பிடி ஓரமா போய் தொங்குங்கள்..
டி.வி.மறைக்குதுல...



**நாராயணி**

மனைவி: உலகம் பூரா போய்
தேடினாலும் என்ன மாதிரி மனைவி
கிடைக்கமாட்டா...
கணவன்: எனக்கென்ன பைத்தியமாடி
புடிச்சிருக்கு...மறுபடியும் உன்னை
மாதிரியே தேட...



**அர்ச்சுன்**

எம்புட்டு அறிவியல் வளர்ந்து என்ன
பிரயோசனம்...
இந்தப் பொண்டாட்டி எதுக்குக் கோபமா
இருக்கான்னு கண்டுபிடிக்கவே
முடியலை!




**கதுர்சன்**



உங்க ஊர்ல
மழை
எப்படிங்க
பெய்யுது?

எல்லா ஊரையும் போல தான், மேல
இருந்து கீழ பெய்யுது

**விக்னேஷ்**



வீட்டுப் பாடம்
ஏன்டா
வேண்டாம்ன்னு
சொல்றே?
வீட்டிலே யாரும்
எழுதித்தர
மாட்டேங்குறாங்க
சேர்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

**(கொழும்பு)**

**நீர்மட்டம் குறைந்து வருவதால், பொது மக்கள் தண்ணீரை மிகவும் சிக்கனமான முறையில் பயன்படுத்த வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.**

நாட்டின் முக்கிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 48 சதவீதமாகக் குறைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 80 முக்கிய நீர்த்தேக்கங்களின் மொத்த நீர்க்கொள்ளளவு தற்போது 48 சதவீதமாகக் காணப்படுவதாக நீர்ப்பாசனப் பணிப்பாளரும் நீர் முகாமைத்துவ பொறியாளருமான எச்.எம்.பி.எஸ்.டி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 6 மாவட்டங்களில் கடுமையான வெப்பமான வானிலை நிலவக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மொனராகலை ஆகிய 6 மாவட்டங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களின் சில பகுதிகளில் பகல் வேளையில் வெப்பக் குறியீடு, அதாவது மனித உடலால் உணரப்படும் வெப்பநிலையானது "கவனம் செலுத்த வேண்டிய" (எச்சரிக்கை) மட்டத்திற்கு அதிகரிக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சிறைச்சாலை மோதல்; உயிரிழப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 2 சிறைச்சாலை அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 31 ஆக உயர்ந்துள்ளது.

சம்பவத்தில் 25 மற்றும் 39 வயதுடைய சிறைச்சாலை அதிகாரிகளே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# இலங்கை உணவுகளுக்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம்



(கொழும்பு)

"ட்ராவல் அண்ட் டூர் வேர்ல்ட்" நிறுவனம் 2026 ஆம் ஆண்டிற்காக வெளியிட்டுள்ள புதிய அறிக்கையின்படி, உலகின் சிறந்த 50 உணவு சுற்றுலாத் தளங்களின் பட்டியலில் இலங்கை இடம் பிடித்துள்ளது.

இந்தத் தரவரிசையில் மெக்ஸிகோ முதலிடத்தையும், இத்தாலி இரண்டாம் இடத்தையும், ஸ்பெயின் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. இலங்கை இந்தப் பட்டியலில் 50 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

உணவு கலாசார பாரம்பரியம், பிராந்திய உணவுகளின் பன்முகத்தன்மை, வீதி உணவுக் கலாசாரம், உள்ளூர் மூலப் பொருட்களின் பயன்பாடு, உயர்தர உணவுகள், நிலைத்தன்மை மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்கும் தனித்துவமான உணவு அனுபவங்கள் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தரவரிசை தயாரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# விசர் நாய்க்கடி அற்ற நாடாக இலங்கையை மாற்றுவதே இலக்கு

## சுகாதார திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

வீதிகளில் உள்ள நாய்களுக்கு உணவளிப்பவர்கள், அந்த நாய்களின் முழுப் பொறுப்பையும் தாங்களே ஏற்றுக்கொண்டு முறையாகப் பராமரிக்க வேண்டுமென கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சஞ்சக பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் 2030 ஆம் ஆண்டிற்குள் விசர் நாய்க்கடி நோயை முழுமையாக ஒழிப்பதற்கான தேசிய வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1973 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நோய் ஒழிப்பு வேலைத்திட்டத்தினால், அந்த காலத்தில் 370 ஆக இருந்த வருடாந்த மரணங்களின் எண்ணிக்கை தற்போது 14 ஆகக் குறைவடைந்துள்ளது.

இருப்பினும், இந்த 14 மரணங்கள் கூட அதிகம் என்பதால், நோய்த்தொற்றின் அடிப்படை ஊற்றையே கட்டுப்படுத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

விசர் நாய்க்கடியால் பாதிக்கப்படுவோருக்கு வழங்கப்படும் சிகிச்சைகளுக்காக அரசாங்கத்திற்குப் பெரும் நிதிச்சுமை ஏற்படுவதாகக் குறிப்பிட்ட அவர், நாய்களுக்கே தடுப்பூசிகளை ஏற்றுவதன் மூலம் இந்த நோயைச் சுமையின்றி ஒழிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

எனவே, மனிதர்களுக்கு நோய் வராமல் தடுப்பதை விட, விலங்குகளிலேயே நோயைக் கட்டுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த முன்னெடுப்பின் ஊடாக 2030 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை விசர் நாய்க்கடி அற்ற நாடாக மாற்றுவதே தங்களின் இலக்கு என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# அரசின் தன்னிச்சையான செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கு பெரும் சவால்

## உடனடியாக நிறுத்த வேண்டும் என்கிறார் ஹர்ஷ



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் சூழலில், அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கு பெரும் சவாலாக மாறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.


நிர்வாக மாற்றங்களை மேற்கொள்ளும்போது, குறிப்பிட்ட நபர்களின் நலன்களை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் முழு நாட்டையும் பிரதிபலிக்கும் வகையில் செயற்பட வேண்டும்.

இத்தகைய முக்கிய தீர்மானங்களை எடுக்கும் போது, துறைசார் நிபுணர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து, வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.


மக்கள் அனை வரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழலில், இவ்வாறான நடைமுறைகள் சாதாரண ஊழியர்களுக்கு இழைக்கும் பாரபட்சமாகவே அமையும்.

அரசாங்கம் முன்னெடுக்கும் எந்தவொரு நிர்வாக மாற்றமும் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் மக்களின் நலன்களை மையப்படுத்தியதாகவும் அமைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் திருக்கோயில் திறப்பு விழா கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி ஜெயந்தி நகர் கம்பன் கலைக்கோயில் வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தமிழ்நாடு "விஜிபி" குழுமத்தலைவர் செவாலியர் கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.


## சர்வதேச கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை நடத்தும் 104ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் ப. கேசவதாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவாட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் கலந்து கொள்வார். (8)

## கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்



(கிளிநொச்சி)

நாட்டிலுள்ள 60 டெங்கு அதி அபாய வலயங்களை மையப்படுத்தி தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவினால் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த சிரமதானப் பணியில் கிளிநொச்சி மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட பொது வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், இலங்கை இராணுவத்தினர் மற்றும் இலங்கை பொலிஸார் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இணைந்து வைத்தியசாலை வளாகத்திலுள்ள டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை சுத்தப்படுத்தி, நீர்தேங்கும் பொருட்களை அகற்றி, சுற்றுப்புறச் சூழலை சுகாதாரமானதாக மாற்றும் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த வேலைத்திட்டம் தொடர்ச்சியாக டெங்கு அபாயம் அதிகம் காணப்படும் பகுதிகளை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## விநாயகர் சதுர்த்தி!



(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வட கிழக்கு கலட்டி வீரகத்தி பிள்ளையார் ஆலய சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி விஷேட பூஜைகள் நடைபெறும் என ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (8)

### புனித கார்மேல் அன்னையின் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித கார்மேல் அன்னை ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி நாளை வியாழக்கிழமை காலை 5.45 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

அன்னையின் திருச்சொருபப் பவனி மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் என ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (நி)

## அன்னதானக் கந்தனுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி கொடி




(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி புதன் கிழமை நள்ளிரவு 12.20 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக் கிழமை காலை தேர்த் திருவிழாவும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை மௌனத் திருவிழாவும் இடம் பெறும் என ஆலய பிரதமகுரு பாலேந்திரா ஐயர் ரவீந்திரா ஐயர் தெரிவித்துள்ளார். (8)




யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாகாண மட்ட தடகள விளையாட்டுப் போட்டியில் தீவக வலயத்தின் யா/காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய மாணவி லிங்கேஸ்வரன் ரதுஷா நீளம் பாய்தல் போட்டியில் 01 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.



யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றவடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டியில் 14 வயதுப் பெண்கள் பிரிவிற்கான 4X100m அஞ்சல் ஓட்ட நிகழ்வில் யா/ காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய மாணவிகள் முதலாம் இடத்தை சூட்டிச் சென்றனர்.

## சட்டவிரோத ஷாம்பூ பக்கற்றுக்கள் கடற்படையினரால் மீட்பு!



(மன்னார்)

தலைமன்னாரில் சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டு வரப் பட்ட ஷாம்பூ பக்கற்றுக்கள் ஒரு தொகுதி கடற்படை யினரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

இலங்கை கடற்படைக் கப்பல் "தம்மென்னா" நிறுவனத்தினால், நேற்று முன்தினம் திங்கட்கிழமை (13) தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டவிரோதமான முறையில் நாட்டிற் குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஷாம்பு பக்கற்றுக்கள் பொதியிடப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன.

5,386 ஷாம்பூ பக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆதாய அரசியல் செய்யும் எதிர்க்கட்சித் தலைவர்

## கடுமையாக விமர்சித்த வட்டகல

(கொழும்பு)

ராஜபக்சர்களின் குடியுரிமை அந்தஸ்த்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று பாராளுமன்றத்தில் யோசனை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் இன்று அவர்களுடனேயே கூட்டணியமைக்க முயற்சிப்பது வேடிக்கையான அரசியல் கொள்கையை வெளிப்படுத்துகிறது என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல விமர்சித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்.

பாதாளக் குழுக்களுக்கும், போதைப்பொருளுக்கும் எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று எதிர்கட்சியினர் தான் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

பாதாளக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதை எதிர்க்கட்சியினர் விரும்பவில்லை. பாதாளக் குழுக்களுடன் கொண்டுள்ள தொடர்பு விசாரணைகளில் வெளிவரும் என்று எதிர்க்கட்சியினர் தற்போது அச்சமடைந்துள்ளார்கள்.

போதைப்பொருளுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகளை எவ்வழியிலாவது நிறுத்த வேண்டும் என்றே முயற்சிக்கிறார்கள். அதற்காக போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.


பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்சர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் பின்னர் அவர்களின் குடியுரிமை அந்தஸ்த்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று யோசனை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று அவர்களுடன் கூட்டணியமைக்க முயற்சிப்பது அவரது அரசியல் கொள்கையை வெளிப்படுத்துகிறது.

தேவைக்கு ஏற்ப அரசியல் கொள்கையை மாற்றிக் கொள்ளும் பழக்கத்தை சஜித் திருத்திக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியினர் எதற்காக கூட்டணியமைத்துள்ளார்கள் என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

ஊழல் மோசடியில் ஒருவர் சிறை செல்லும் போது வெளியில் இருந்து அவருக்காக குரல் கொடுப்பதற்காகவே எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்துள்ளார்கள். இதனால் மக்களுக்கு எந்த பயனும் கிடைக்காது" என அவர் தெரிவித்தார். (நி)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு.செல்லையா கண்ணதாஸ்

முதுகல்விமாணி (M.Ed)

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 09.07.2026 அன்று நடைபெற்ற தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப் பட்டத்தினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர் திரு. செல்லையா கண்ணதாஸ் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
பாடசாலை நலன்புரிக்கழகம்,
யா/ இனுவில் இந்துக் கல்லூரி.

(8045)

---

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 10.02.1930 — மறைவு 13.07.2026

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் திருமதி.சநாதனி கங்காதரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.
இராஜபூபதி பரமேஸ்வரன்



அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[2517]

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

---

## விசேட சுற்றிவளைப்பில் 855 பேர் கைது!

(கொழும்பு)

"முழு நாடுமே ஒன்றாக" என்ற நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய போதைப் பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாத்திரம் 855 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"முழு நாடுமே ஒன்றாக" - தேசிய செயற்பாடு என்ற தொனிப்பொருளின் கீழ் கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

அதற்கமைய நாடு முழுவதும் சுமார் 859 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார், 855 சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர். (நி)

---

## வட இலங்கைச் சங்கீத சபை அறிமுறைப் பரீட்சைகள்-2026

25.07.2026,26.07.2026 (சனி, ஞாயிறு ) ஆகிய இரு தினங்களும் நடைபெற உள்ள அறிமுறைப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது. குறித்த பரீட்சைகள் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் அனுப்பப்பட்ட நேரசூசிக்கு அமைவாக குறித்த பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

**25.07.2026** ஆம் திகதிய பரீட்சை - **01.08.2026** ஆம் திகதியும், **26.07.2026** ஆம் திகதிய பரீட்சை - **02.08.2026** ஆம் திகதியும் நடைபெறும்.

**மாலதி முகுந்தன்,**
**கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை.** (C-6043)

---

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 25, கம்பனை அம்மன் ஒழுங்கை, வட்டாரம்-05

வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05, கம்பனை அம்மன் ஒழுங்கையிலுள்ள இல: 25 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சின்னப்பு கணபதிப்பிள்ளை என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் முழு ஆதனத்தினை சரவணமுத்து ஆறுமுகம் பெண் மதிவதனி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2338/18.08.1979ஆம் இலக்க உறுதியால் வேலாயுதம் அல்லது வேலாயுதபிள்ளை அருணகிரிநாதன் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

கதிரவேலு தவச்செல்வமும் பெண் நளாயினியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதமளவில் சரவணமுத்து ஆறுமுகம் மற்றும் அவரின் இரு பிள்ளைகளிடமிருந்து பணத்தைச் செலுத்தி கொள்வனவு செய்திருந்ததாகவும், எனினும் அக்காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது பெயரில் உறுதி நிறைவேற்றிக்கொள்ள முடிந்திருக்கவில்லை எனவும் ஆகையால் 1996 ஆம் ஆண்டளவில் குறித்த உறுதியின் தாயுறுதியான குறித்த 2338 ஆம் இலக்க உறுதியின் பிரதியொன்றினை தம்மிடம் ஒப்படைத்திருந்ததாகவும், குறித்த பிரதியினைத் தம்வசம் கொண்டு 1995 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையான 18 வருட காலமாக எவ்வித தலையீடோ/குறுக்கீடோ இன்றி குறித்த ஆதனத்தை ஆட்சி செய்து வருவதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு. கதிர்காமநாதன் முகதாவில் 14690/06.07.2013 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

முருகவேல் ஆனந்தகுமாரும் பெண் சசிரேகாவும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8559/23.05.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த கதிரவேலு தவச்செல்வமும் பெண் நளாயினியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர் : "காளுவன்"
இறை : சுழிபுரம்
விஸ்தீரணம்: நில.ப.இலா 02 குளி 10

எல்லைகள்: கிழக்கு- மூன்று முழ அகலமான பிரத்தியேக தென்புற ஆதனத்திற்குரிய பாதை, வடக்கு : கம்பனை வீதி, மேற்கு: சிதம்பரபிள்ளை முருகவேல் பெண் இராசலட்சுமியின் ஆதனம், தெற்கு : சதீஸ்குமார் பெண் குமுதினியின் ஆதனம்

குறித்த முருகவேல் ஆனந்தகுமாரும் பெண் சசிரேகாவும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முருகவேல் ஆனந்தகுமாரும் பெண் சசிரேகாவும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (8039)

---

## யாழ்ப்பாணம் மாநகரசபை நல்லூர் உற்சவ காலத்தில் கோவிலை சுற்றியுள்ள பகுதியில் நிரவுவதற்காக மணல் கொள்வனவுக்கான கேள்விகள் கோரல் - 2026

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நல்லூர் உற்சவ காலத்தில் கோவிலை சுற்றியுள்ள பகுதியில் நிரவுவதற்காக மணல் கொள்வனவுக்கான பதிவுசெய்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 15.07.2026- 24.07.2026 ஆம் திகதிவரை சபையின் பெறுகை முகாமைத்துவப் பிரிவுடன் தொடர்பு கொண்டு கூறுவிலைப்படிவங்களினைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 24.07.2026 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு முன்னதாகப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**கேள்விதிறக்கும் திகதி: 24.07.2026**
**நேரம்: முற்பகல் 10.00 மணி**

**முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.** (C-6044)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## முதன் முறையாக உளவு அமைப்பை உருவாக்கும் ஜப்பான்




(டோக்கியோ)

சீனா, ரஷ்யா மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளிடம் இருந்து நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை சமாளிக்க, முதன் முறையாக மிகப் பெரிய மத்திய உளவு அமைப்பை, உருவாக்கி வருகிறது கிழக்காசிய நாடான ஜப்பான்.

இரண்டாம் உலகப் போரில் அடைந்த தோல்விக்குப் பின், ஜப்பான் இராணுவ ரீதியாகவும் உள்வு ரீதியாகவும் பல கட்டுப்பாடுகளை தனக்குத் தானே விதித்துக் கொண்டது.

அங்கு இராணுவ அமைச்சகம், வெளியுறவுத்துறை, காவல்துறை என ஆளாளுக்கு தனித்தனியாக தகவல்களைச் சேகரித்து வந்தனர்.

அமெரிக்காவின் "சி.ஐ.ஏ.," அல்லது பிரிட்டனின் "எம்.ஐ.,-6" போன்ற ஒருங்கிணைந்த வலுவான உளவு அமைப்பு ஜப்பானில் இல்லை. இதனால் வெளிநாட்டு உளவாளிகள் எளிதாக ஊடுருவும் நாடாக ஜப்பான் மாறிவிட்டதாக கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், பிரதமர் சனா தகாய்ச்சி தலைமையிலான அரசு, அமெரிக்கா, ஜேர்மனி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் புலனாய்வு அமைப்புகளின் உதவியுடன் புதிய உளவு அமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. (நி)

## ஹார்முஸ் எங்களது மோதிக் கொள்ளும்

(வோஷிங்டன்)

**ஹார்முஸ் ஜலசந்தியை நிர்வகிப்பது தொடர்பாக அமெரிக்கா- ஈரான் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.**

தற்போது ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் எளிதாக சென்று வர வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது. அதேவேளையில் சுங்க கட்டணம் செலுத்தினால் தான் கப்பல்களை அனுமதிப்போம் என்று ஈரான் சொல்கிறது.

தற்போது ஹார்முஸ் ஜலசந்தி எங்கள் கட்டுப்பாட்டில்தான் உள்ளது என ஈரான் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக "கடந்த மாதம் எட்டப்பட்ட இடைக்கால அமைதி ஒப்பந்தத்தின்படி, ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்தை நிர் வகிக்கவும், அதற்கான கட்டணங்களை வசூலிக்கவும் தங்களுக்கு உரிமை உள்ளது" என்று ஈரான் தெரிவித்துள்ளது.

ஆனால், கப்பல் போக்குவரத்திற்கான சுதந்திரம் குறித்த சர்வதேச சட்டங்களை சுட்டிக்காட்டி அமெரிக்காவும் பிற நாடுகளும் இதனை மறுக்கின்றன.

அத்துடன், ஈரானின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட மாற்று பாதையொன்றை உருவாக்கவும் அமெரிக்க இராணுவம் முயன்றுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "நாங்கள் ஹார்முஸ் ஜலசந்தியின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்டு வருகிறோம். அனைத்து விடயங்களிலும் உடன்பாடு எட்டப் பட்டது" என்று தெரிவித்துள்ளார்.

எனினும், பின்னர் ஈரானியப் பேச்சுவார்த்தையாளர்கள் தொடர்பு வருகின்றனர்.

## பாரிஸில் பயங்கர காட்டுத்தீ!

- 800 ஹெக்டேயர் காடுகள் தீக்கிரை
- பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றம்
- தொடருந்து சேவைகள் பாதிப்பு
- 400 தீயணைப்பு வீரர்கள், விமானங்கள் களத்தில்



(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற ஃபோன் டைன்பிளூ காடுகளில் ஏற்பட்டுள்ள பயங்கர காட்டுத்தீ, பாரிஸ் நகரின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாரிஸிலிருந்து தென் கிழக்கே சுமார் 60 கி.மீ தொலைவில் உள்ள இந்த காட்டுப்பகுதியில், சூடான காற்று காரணமாகத் தீ மிக வேகமாகப் பரவி வருகிறது.

இதுவரை 800 ஹெக்டேயருக்கும் அதிகமான பரப்பளவுள்ள காடுகள் முற்றிலும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்த தீவிர காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த சுமார் 400 தீயணைப்பு வீரர்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் நீர் குண்டு விசிறும் விமானங்கள் மூலம் தொடர்ந்து போராடி

பிரான்சின் தெற்குப் பகுதியிலிருந்து பாரிஸ் பிராந்தியத்திற்குத் தீயணைப்பு விமானங்கள் அனுப்பப்படுவது இதுவே முதல் முறை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அசாதாரண காட்டுத்தீ காரணமாக, பிரான்சின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளை இணைக்கும் முக்கிய ஏ6 அதிவேக நெடுஞ்சாலை பகுதியளவில் மூடப்பட்டுள்ளதுடன், தொடருந்து சேவைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் வாடோவ் போன்ற அருகே அமைந்துள்ள கிராமங்களிலுள்ள 15 இற்கும் மேற்பட்ட வீடுகளில் இருந்து பொதுமக்கள் அவசரமாகப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பருவநிலை மாற்றத்தின் காரணமாகவே இத்தகைய தீவிர வெப்ப அலைகளும் காட்டுத்தீயும் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# ...து கட்டுப்பாட்டில்...

# அமெரிக்கா-ஈரான்!



கொண்டு சில மாற்றங்களைப் பரிந்துரைத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் இது குறித்து விரிவாக அவர் தெரிவிக்கவில்லை.

தற்போது ஹார்முஸ் ஜலசந்தியை நிர்வகிப்பது தொடர்பாக அமெரிக்கா- ஈரான் இடையே போட்டி நிலவுகிறது. ஈரான் இந்த விடயத்தில் விட்டுக்கொடுக்குமா? என்பது தெரியவில்லை.

அதேவேளையில் உலக நாடுகளின் வர்த்தக கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சென்று வர வேண்டுமென்றால் அதனை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா நினைக்கிறது.

இவர்களின் மோதலால் உலக நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருளாதாரம் சீர்குலையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (நி)

## பொதுவெளியில் தோன்றவுள்ளார் ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா



(டெஹ்ரான்)

அமெரிக்காவின் தாக்குதலுக்கு பின் பொது வெளியில் தோன்றாத ஈரானின் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி, அடுத்த வாரம் நடைபெற உள்ள தன் தந்தை கமேனியின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய நாடான ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல், கடந்த பெப்ரவரி 28 இல் போர் தொடுத்தன. அன்றைய தினம் அடுத்தடுத்து நடத்தப்பட்ட தாக்குதலில், அந்நாட்டின் அப்போதைய உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி உட்பட பலர் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து கமேனியின் மகன் மொஜ்தபா கமேனி புதிய உச்ச தலைவராக பொறுப்பேற்றார். எனினும் பல வாரங்களாக பொது வெளியில் தோன்றுவதை அவர் தவிர்த்து வந்தார்.

பொதுவெளியில் தோன்றாமல் டெலிகிராம் மற்றும் அரசு ஊடகங்களில் வெறும் எழுத்து பூர்வமான அறிக்கைகள் வாயிலாக மட்டுமே தன் உத்தரவுகளை மொஜ்தபா பிறப்பித்து வந்தார்.

சமீபத்தில் நடந்த தந்தை கமேனியின் இறுதிச் சடங்கில் கூட மொஜ்தபா பங்கேற்கவில்லை. பாதுகாப்பு காரணங்களால் அவர் பங்கேற்கவில்லை என ஈரான் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் வரும் 23 ஆம் திகதி, மாலை 5 மணிக்கு டெஹ்ரானில் உயிரிழந்த கமேனிக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது. இதில், மொஜ்தபா கமேனி பங்கேற்பார் என ஈரான் அரசு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் அவர் நேரில் பங்கேற்பாரா, அல்லது "வீடியோ கான்பரன்சிங்" முறையில் பங்கேற்பாரா என்பது குறித்த விபரங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. (நி)

## சவூதி அரேபியா மீது ஹவுதிகள் ஏவுகணைத் தாக்குதல்



## 4 ஆண்டுகால போர்நிறுத்தம் முறிவடைந்தது

(ஏமன்)

தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள விமான நிலையம் மீது சவூதி அரேபியா குண்டுவீசியதாகக் குற்றம் சாட்டி, ஏமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சவூதி அரேபியா மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதன் மூலம் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி அமைப்பிற்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையே நிலவி வந்த 4 ஆண்டுகால போர் நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்துள்ளது.

சவூதி அரேபியாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள மலைப் பாங்கான அப்ஹா சர்வதேச விமான நிலையத்தை இலக்கு வைத்து இந்த ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஹவுதி இராணுவ ஊடகப் பேச்சாளர் யஹ்யா சாரி தெரிவித்துள்ளார்.

"பயங்கரவாத ஹவுதி போராளிகளால் தெற்கு பிராந்தியத்தை நோக்கி ஏவப்பட்ட" ஏவுகணைகளைத் தாங்கள் நடுவானில் மறித்து அழித்துள்ளதாக சவூதி தலைமையிலான இராணுவக் கூட்டமைப்பு எக்ஸ் தளத்தில் அறிவித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் [illegible] தரப்பிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட தற்காலிக அமைதி ஒப்பந்தத்திற்குப் பிறகு, சவூதி அரேபியா மீது ஹவுதிகள் நடத்தியுள்ள முதல் தாக்குதல் இதுவாகும்.

சவூதி நடத்திய தாக்குதலை "நேரடி ஆக்கிரமிப்பு" எனக் குறிப்பிட்டுள்ள ஹவுதிகள், இதன் மூலம் அமைதிக்காலம் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

முன்னதாக, ஏமனின் ஹவுதி அமைப்பு தங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சனா சர்வதேச விமான நிலையை [illegible] சவூதி அரேபியா வான்வழித் தாக்குதலை நடத்தியதாகக் குற்றம் சாட்டியது.

எனினும் சவூதி அரேபியாவின் ஆதரவு பெற்ற, ஏமனின் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கம் தாங்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாக உரிமை கோரியுள்ளது.

ஏமனின் இறையாண்மையை மீறி ஈரான் நாட்டு விமானம் ஒன்று சனாவில் தரையிறங்குவதைத் தடுப்பதற்காகவே அதன் ஓடு தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏமன் பாதுகாப்பு அமைச்சகம் விளக்கியுள்ளது.

சவூதி வான்பரப்பைப் பயன்படுத்த வேண்டாம் எனப் பிற சர்வதேச விமான நிறுவனங்களுக்கு ஹவுதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சவூதி அரேபியா தனது எண்ணெய் ஏற்றுமதியை செங்கடல் வழியேயான குழாய்கள் மூலம் மேற்கொண்டு வருகிறது. ஹவுதிகளுடனான இந்த நேரடிப் போர் மீண்டும் தீவிரமடைந்தால், செங்கடல் வழியேயான சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் எண்ணெய் விநியோகம் பெரும் சவாலுக்குள்ளாகும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், சனா விமான நிலையத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சொந்தமான விமானம் ஒன்றை ஹவுதிகள் தடுத்து வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும், தங்களது பணியாளர்கள் மற்றும் விமானப் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் நீடித்து வரும் ஏமனின் இந்த உள்நாட்டுப் போர், உலகின் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடிகளில் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கட்டைக்காட்டில் சுற்றிவளைப்பு சுருக்கு வலையுடன் ஒருவர் கைது!

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கட்டைக் காட்டில் ஒளிபாய்ச்சி சட்டவிரோத மாக மீன்பிடிப்பதற்காக கடற்கரை பகுதிக்கு உழவு இயந்திரம் மூலம் கொண்டுவரப்பட்ட சட்டவிரோத சுருக்குவலை மருதங்கேணி பொலிஸாரால் பறிமுதல் செய்யப் பட்டதுடன் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி அதி கரித்துள்ளதால் அதனை தடுக்கும் முயற்சியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் மற்றும் மருதங் கேணி பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்

இந் நிலையில் கடந்த ஞாயிற் றுக்கிழமை (12) இரவு கட்டைக் காட்டில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இதன்போது மிக இரகசியமாக



உழவு இயந்திரத்தில் கடற்கரை பகுதிக்குக் கொண்டுவரப்பட்ட சுருக்குவலையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீதி மன்றத்தில் முற்படுத்தப்படவுள் ளார். (8-60)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1999- NRC<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: BSc,London<br>எதிர்பார்ப்பு: PR உள்ளவர்<br>தொ.இ: B/17089 | பிறப்பு- 1991-இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்- 5'4"<br>தகைமை/தொழில்: Degree (not Complete)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16903 |
| gpwgG1991-, e;J<br>el rj j pk ;mD rk;<br>4, y#hprt ;<br>c auk; 5'9"<br>j i fi k{nj hopy ; A/L, Supervisor, Shop(Own)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/17092 | பிறப்பு- 1995-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் :BSc,Software Engineer<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/16906 |
| பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 6"<br>7இல்செவ்<br>தகைமை/தொழில்:BSC, Cyber Security Engineer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/17095 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>8இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC, Assistant Lecture<br>எதிர்பார்ப்பு: அரச /தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16907 |
| பிறப்பு: 1991 -இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்-BA, Master Degree, London<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17096 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>8இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc,MSc, Engineer (London)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/16911 |
| பிறப்பு: 1991- இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி-பா- 14 1/2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L,Supervisor (Dubai)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/17098 | பிறப்பு-1992 -இந்து<br>நட்சத்திரம்-பூரம்<br>கி-பா-30<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc, Engineer<br>எதிர்பார்ப்பு - உயர்பதவிகள். சைவபோசனம்<br>தொ.இ: G/16912 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 616



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நல்ல தீர்ப்பு

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். ரொம்ப நல்லவர்.

ஒரு நாள் அரண்மனையிலே விசாரணை நடந்துகொண்டு இருந்தது. அதிலே ஒரு வழக்கு. ஒரு விவசாயி வந்து புகார் கொடுத்தார்.

என்ன புகார் என்றால், அவர் வயலிலே ஆடுகள் வந்து மேய்ந்து பயிரை அழித்து விட்டது. நிறைய உழைத்து, செலவு செய்து, பயிரை உண்டாக்கி வைத்திருந்தேன். எல்லாம் போய்விட்டது. இனிமேல் நான் என்ன செய்வது? நீங்கள்தான் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும் என்றார் அந்த விவசாயி.

அந்த ஆடுகளுக்குச் சொந்தக்காரர் யார் என்று கண்டுபிடித்து அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வாங்க என்று உத்தரவு போட்டார் ராஜா.

சேவகர்கள் போனார்கள். அவரைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். ராஜா விசாரித்து முடித்துவிட்டு தீர்ப்பு வழங்கினார்.

விவசாயி அடைந்திருக்கிற இழப்புக்கு ஈடாக உன்னுடைய ஆடுகளை அவரிடம் கொடுத்துவிட வேண்டியதுதான் என்று சொல்லிவிட்டார்.

அந்த மன்னருடைய மகன் இதைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்தான். இந்தத் தீர்ப்பை இன்னமும் சிறப்பாக வழங்கலாமே என்று நினைத்தான். அதை அப்பாவிடம் சொன்னான் . உடனே அந்த அரசர் "சரி நீயே இதற்குச் சரியான தீர்ப்பு சொல்" என்று விட்டார்.

அந்த இளவரசன் தீர்ப்பு சொல்கிறான். "உமது ஆடுகள் எல்லாவற்றையும் ஓர் ஆண்டு காலத்துக்கு அந்த விவசாயிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த வருடத்துக்குள்ளே அந்த ஆடுகள் போடுகிற குட்டிகள், பால், எரு எல்லாம் விவசாயி எடுத்துக் கொள்ள வேண்டியது. ஒரு வருடத்துக்குப் பிறகு உமது ஆடுகளை நீ திரும்பி வாங்கிக் கொள்ளலாம்" என்றார்.

இது தான் இளவரசன் சொன்ன தீர்ப்பு. இது சரியான தீர்ப்புத் தான். இனி எனது அரசு பொறுப்புகளை இளவரசன் வசம் ஒப்படைக்கின்றேன்! என்று சொல்லி ஒப்படைத்து விட்டாராம்.

தாவூத்நபி சுலைமான் நபி இவர்களுடைய சரித்திரத்திலே இந்த சம்பவம் காணப்படுவதாக ஒரு சகோதரி (திருமதி எச். கோரி )இதை நமக்கு எழுதியிருக்கிறார்.

ஒரு தண்டனையைப் பெறுகிறவன் அதற்குப் பிறகு சமூகத்திலே நல்லவிதமாக வாழ வாய்ப்பு இருக்கிற மாதிரி தீர்ப்பு அமைய வேண்டும். அதற்கு இது ஓர் உதாரணம்.

சில தீர்ப்புகள் எப்படி அமைகிறது என்றால் ஒரு தண்டனையை அனுபவித்து முடித்தவன் அதன் பிறகு அவன் இந்த சமூகத்தில் நல்லவனாக வாழ நினைத்தாலும் அதற்கு தகுதியில்லாதவன் என்கிற அளவுக்கு சூழ்நிலை அமைந்து விடுகிறது.

இது சிந்திக்கவேண்டிய ஒரு செய்தி.

இன்னொரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் போட்டி வைத்தார். என்ன போட்டிஎன்றால் அரண்மனை வாசலிலே ஒரு பெரிய நீச்சல்குளம். அதிலே நிறைய விஷப் பாம்புகள்.

"எந்த இளைஞன் துணிச்சலாக அந்த நீச்சல் குளத்திலே குதித்து, நீந்தி, கரையேறி வருகிறானோ அவனுக்கு 100 ஏக்கர் நிலம் பரிசாக வழங்கப்படும். அது வேண்டாம் என்றால் 1000 ஆடுகள் பரிசாக வழங்கப்படும். அதுவும் வேண்டாம் என்றால் என்னுடைய மகளை கல்யாணம் செய்து கொள்ளலாம்!"இது தான் மன்னருடைய அறிவிப்பு.

பரிசெல்லாம் நல்லாத்தான் இருக்கு. இருந்தாலும் பாம்புகள் உள்ள குளம் என்பது நல்லா இல்லையே அதனாலே யாரும் அதிலே குதித்து நீந்த முன்வரவில்லை.

இருந்தாலும் திடீர் என்று ஒரு இளைஞன் அந்த நீச்சல்குளத்திலே குதித்தான். நீந்தினான். ஒருவழியாக கரையேறி வந்துவிட்டான்.

மன்னருக்கு ரொம்ப மகிழ்ச்சி. "நீ தான் தைரியமான இளைஞன்". வா இப்படிஎன்று கூப்பிட் டார். அருகில் வந்தான் அந்த இளைஞன் தண்ணீர் சொட்ட சொட்ட.

உனக்கு 100 ஏக்கர் நிலம் வேணுமா?"என்றார். வேண்டாம் என்றான். சரி. அப்படி என்றால் 1000 ஆடுகள் வேண்டுமா? என்றார் அதுவும் வேண்டாம் என்றான்.

ஓ அப்படி என்றால் என் பொண்ணு வேணுமா?என்றார். அதுவும் வேண்டாம் என்றான். ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படி என்றால் உனக்கு என்னதான் வேணும் என்றார். என்னைப் பிடித்து இந்த குளத்திலே தள்ளிவிட்டவன் யார் என்று எனக்குத் தெரிய வேண்டும்"அப்படி என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்தியூ டக்வேர்த் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு நேற்று விஜயம் செய்து, நூலகத்தின் சேவைகள், வரலாற்றுப் பாரம்பரியம் மற்றும் சிறப்பம்சங்களைப் பார்வையிட்டார்.

இவ்விஜயத்தின் போது, வாசிப்பு மற்றும் அறிவுப் பரவலை ஊக்குவிக்கும் வகையில் பெறுமதிமிக்க நூல்கள் உயர்ஸ்தானிகரால் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

குறிப்பாக அவுஸ்திரேலிய பிரபல தமிழ் எழுத்தாளர் ஷங்கரி சந்திரனால் எழுதப்பட்ட "சாய் டைம்ஸ் அட் சினமன் கார்டன்ஸ்" என்ற பிரபல நூலும் தூதுவரால் வழங்கப்பட்டது.

இந்த விஜயத்தின் போது யாழ் மாநகர ஆணையாளர், பொது சன பிரதம நூலகர், நூலக உத்தியோகத்தர்கள், அவுஸ்திரேலிய தூதரக அதிகாரிகள் பங்கேற்றனர். (8-33)

# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைப்பு




(தருமபுரம்)

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மீனவர்களுக்கு வலைகள் மற்றும் படகுகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி கடற்றொழில் திணைக்கள அலுவலகத்தில் குறித்த திணைக்களத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் வி.கலிஸ்ரன் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 73 மீனவர்களுக்கு வலைகளும் 2 மீனவர்களுக்கு படகும் வழங்கப்பட்டது. (8-316)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 300 | 300 | 400 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | -- | 200 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 900 | 600 | 900 | 1200 | 1000 | 1100 |
| தக்காளி | 500 | 500 | 450 | 450 | 400 | 420 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 200 | 200 | 130 |
| கோவா | 200 | 300 | 280 | 250 | 180 | -- |
| கரட் | 350 | 400 | 350 | 400 | 350 | 330 |
| பூசணி | 220 | 200 | 150 | 200 | 180 | 160 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 | 200 | 140 |
| வாழைக்காய் | 140 | 250 | 110 | 150 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 | 300 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 1000 | 800 | 700 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 400 | 200 | 150 |
| கருணைக் கிழங்கு | 400 | 300 | 350 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 300 | 400 | 350 | 250 | 350 | 275 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 300 | 300 | 290 |
| பீற்றூட் | 400 | 500 | 400 | 400 | 350 | 450 |
| கறிமிளகாய் | 500 | 400 | 400 | 600 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 300 | 400 | 450 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 500 | 400 | 430 |
| தம்புள்ள-கத்தரி | 150 | 200 | -- | 350 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 30 | 80 | -- | 60 |
| தேசிக்காய் | 200 | 400 | 150 | 400 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 150 | 120 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 400 | -- | 300 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 350 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | 180 | 200 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 70 | 100 | -- | 100 | -- | 50 |
| ஈரப்பலா | 200 | 100 | -- | 300 | -- | 120 |

# இராசிபலன்

15.07.2026
ஆனி 31, புதன் கிழமை
பிரதமை பிற்பகல் 2.27 மணிவரை

பூசம் பின்னிரவு 1.12 மணிவரை
சுப நேரம் 4.30-6.00 மணிவரை
இராகு காலம் 12.00-1.30 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம்,
பூராடம்.

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உற்றார் உறவினர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுக முண்டு.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம்.

**துலாம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூல முண்டு.

**ரிஷபம்** தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள், சுப நிகழ்வுகளில் புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்** தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மிதுனம்** தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்வீர்கள், வாக்குமேன்மையுண்டு.

**கன்னி** பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு, விருந்தினர்களின் வருகையுண்டு.

**தனுசு** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

சந்தர்ப்பத்தை உருவாக்குபவர்கள் வெற்றியடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1088





அதே சமயத்தில் முருகய்யன், "ஐயோ! யானைக்கு மதம் பிடித்து விட்டது. ஓடுங்கள்! உடனே ஓடுங்கள்" என்று பெருங்கூச்சலிட்டான்.

ஜனங்கள் முன்னைக் காட்டிலும் அதிக பீதியடைந்து நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். அக்கம் பக்கத்திலிருந்த குறுக்கு வீதிகளிலும் சந்துகளிலும் புகுந்து ஓடினார்கள். திறந்திருந்த வீடுகளுக்குள் நுழைந்து ஒளிந்துகொண்டார்கள். வேறு எதற்கும் அஞ்சாத தீர நெஞ்சமுள்ளவர்களும் மதங்கொண்ட யானை என்றால் ஓடத்தான் வேண்டும். எப்பேர்ப்பட்ட வீராதி வீரனானாலும் மதங்கொண்ட யானையை எதிர்க்க முடியாது. ஆயுதங்களுடனே எதிர்த்து நிற்பதும் இயலாத காரியம். நிராயுதபாணிகளான ஜனங்கள், ஆண்களும், பெண்களும், முதியோர்களும், பாலர்களும், மதயானைக்கு முன்னால் சிதறி ஓடாமல் வேறு என்ன செய்ய முடியும்?

திரு ஆரூர் நகரத்தைத் தாண்டியது, இளவரசர் யானையை நேரே தஞ்சாவூர்ச் சாலையில் செலுத்துவதற்குப் பதிலாக, வடமேற்குத் திசையை நோக்கித் திருப்பினார். முதலிலேயே அவருக்கு வழியில் பழையாறையை அடைந்து அங்கே தம் திருத்தமக்கை யார் இருந்தால், அவரைப் பார்த்துப் பேசிவிட்டுத் தஞ்சை போகவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இப்போது அது ஊர்ஜிதம் ஆயிற்று. மதம் பிடித்த யானை குறுக்கே விழுந்து ஓடுவதுதான் இயற்கையாயிருக்கும். தஞ்சைச் சாலையில் சென்றால் மக்கள் தம்மை விடாமல் தொடர்ந்து வரக்கூடும். வழியில்லாத வழியில் யானை போய்விட்டால், ஜனங்கள் தொடர்ந்து வரமுடியாது!

இவ்விதம் அதி விரைவில் சிந்தித்து முடிவுசெய்து, யானையை வடமேற்குத் திசையில் குறுக்கு வழியில் செலுத்தினார். வயல்கள், வரப்புகள், வாய்க்கால்கள், நதிகள், அவற்றின் உடைப்புகள் இவை ஒன்றையும் பொருட்படுத்தாமல் யானை ஜாம் ஜாம் என்று மனம் போன போக்கில் சென்றது. இளவரசரின் உள்ளமும் இனந்தெரியாத உற்சாகத்தை அடைந்து, கூண்டிலிருந்து விடுதலை அடைந்த பறவையைப் போல் ஆகாச வெளியில் வட்டமிட்டுத் திரிந்தது.

தம்முடைய வாழ்நாளில் ஒரு முக்கியமான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உள்ளுணர்ச்சியிலிருந்து உற்சாகமும் பரபரப்பும் பொங்கிக் கொண்டிருந்தன.

யானை ஓடத் தொடங்கிய அதே சமயத்தில் முருகய்யனும் "யானைக்கு மதம் பிடித்துவிட்டது!" என்று கூச்சலிட்டுக் கொண்டு ஓடினான். யானையினால் தூக்கி எறியப்பட்ட பாகன் விழுந்த இடத்தைச் சுமாராகக் குறி வைத்துக்கொண்டு சென்றான். இளவரசர் தங்கியிருந்த சோழ மாளிகைக்குச் சற்றுத் தூரத்தில் நாடெங்கும் புகழ் பெற்ற கமலாலயம் என்னும் தடாகம் இருந்தது.

அந்தக் குளக்கரையின் அருகில் சென்று பார்த்தான். யானைக்குப் பயந்தவர்கள் பலர் குளக்கரையில் இறங்கி நின்றார்கள். சிலர் குளத்தில் தண்ணீரிலே கூட இறங்கியிருந்தார்கள். ஒரு மனிதன் தட்டு தடுமாறி நீந்திக் கரையேறிக் கொண்டிருந்தான். அவனை முருகய்யன் உற்றுப் பார்த்தான். முதல் நாளிரவு யானைப்பாகனையும், ராக்கம்மாளையும் அழைத்துக்கொண்டுபோன மந்திரவாதிதான் அவன்! அதிர்ஷ்டக்காரன்! ஆயுள் ரொம்பக் கெட்டி! யானை தூக்கி எறிந்தும் உயிர் பிழைத்திருக்கிறான் அல்லவா?

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

## ஏரிக்கரையில் பேய்



(நேற்றைய தொடர்ச்சி)

சந்தையில் பெர்ரிப் பழம் கிடைக்கவில்லை. பேய் என்றதும் எல்லோரும் பயந்து விட்டனர். ஆனால் பேய்களுக்குப் பயப்படுவதாகச் சொல்லிக் கொள்ள அவர்களுக்கு வெட்கமாக இருந்தது. ஆகவே, ஏன் பெர்ரிப் பழம் பறிக்க ஏரிக்கரைக்குப் போகவில்லை என்று கேட்டால், இந்த ஆண்டு பெர்ரிப் பழம் விளையவில்லை. பழம் விளைந்தால் அல்லவா பறிக்கப் போகலாம் என்று பதில் கூறினார்கள்.

ஆனால் இந்தச் செய்தி பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் செய் தியாளர்களை அந்தச் சிற்றூருக்கு அனுப்பினார்கள். புரட்சி ஏற்பட்டு இருபது ஆண்டுகள் கழித்து முதன் முதலாகத் தோன்றியிருக் கும் பேயைப்பற்றித் தெரிந்து செய்தி கொடுப்பதற்காகச் செய்தியாளர்கள் அந்தச் சிற்றூருக்குச் சென்றனர்.

பேயைக் கண்ட கிழவரை அவர்கள் பேட்டி கண்டார்கள். பேயை எங்கே கண்டீர்கள் என்று கேட்டார்கள். ஏரிக்கரையில் கண்டதாகக் கூறினார் கிழவர். "பேய் எப்படி இருந்தது" என்று கேட்டார்கள்.

"அது மனிதனைப் போலவும் இல்லை, பறவையைப் போலவும் இல்லை. அதன் குரல் பயங்கரமாக இருந்தது. அது விரட்டிக் கொண்டு வந்து என் காலைக் கொத்தியது. அது பாய்ந்து கொத்தியதில் என் காற்சட்டை பொத்தலாகிவிட்டது" என்றார் கிழவர்.

மறுநாள் செய்தியாளர்கள் கிழவரை அழைத்துக் கொண்டு ஏரிக்கரைக்குச் சென்றார்கள். முதலில் வர மறுத்த கிழவர், துணைக்கு ஐந்தாறுபேர் வருவதால் சிறிது மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு புறப்பட்டார்.

பேய்கள் பகலில் உச்சி வேளையிலும், இரவிலும் தான் நடமாடும் என்பது பழைய காலத்து நம்பிக்கை. செய்தியாளர்கள் ஏரிக்கரை போய்ச்சேரும் போது மாலை நேரம். எனவே இரவு வரும் வரை காத்திருந்தார்கள். இரவு நெடுநேரம் வரை காத்திருந்தார்கள். பேயைச் சுடுவதற்குச் சுழல் துப்பாக் கிகள், புகைப் படம் எடுப்பதற்குப் புகைப்படப் பெட்டிகள், அதன் குரலை ஒலிப்பதிவு செய்வதற்கு பதிவு நாடாக் கருவிகள் எல்லாம் கொண்டு போயிருந்தார்கள்.

நெடுநேரம் வரை எந்தப் பேயும் வரவில்லை. எனவே, செய்தியாளர்கள் ஒவ்வொருவராக ஏரிக்கரையில் தூங்கத் தொடங்கிவிட்டார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒற்றுமையின் நோக்கம் மக்கள் நலன் சார்ந்ததாயின்...

தமிழ் பேசும் ஆறு அரசியல் கட்சிகள் பொது உடன்படிக்கையின் கீழ் இயங்குவதற்கு இணக்கம் கண்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய ஆறு கட்சிகள் இவ்விதம் பொது உடன்பாட்டின் கீழ் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளன.

நல்லது. சிறுபான்மை இனத்தின் உரிமைக்கான குரல் என்பது தமிழ் – முஸ்லிம் மக்களின் ஒற்றுமையினூடாக வெளிப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் எங்கள் நாட்டில் அது சாத்திய மற்றுப்போனது.

ஆம், தமிழ் இனம் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த போது, அந்த ஊட்டில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் தங்களின் நலன்களை மட்டும் முன்னிலைப்படுத்தி அரச தரப்புகளுடன் இணைந்து செயற்படலாயின.

தவிர, யுத்த காலத்தில் நாட்டின் அரச உயர் மட்டங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதிலும் கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் தங்களை வளர்த்துக் கொள்வதிலும் அவர்கள் குறுக்கு வழிகளைப் பயன்படுத்தி வெற்றியும் கண்டனர்.

அதேநேரம் அப்பாவித் தமிழ் மக்கள் பேரினவாத வெறியாட்டத்திற்குப் பலியாகிப்போன போது, இந்த நாட்டின் முஸ்லிம் அரசியல் கட்சிகள் மௌனம் சாதித்தன.

இதற்கும் மேலாக, ரவூப் ஹக்கீம் அமைச்சராக இருந்த போது ஐ.நா சபைக்குச் சென்று இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெறவில்லை எனக் கூறியிருந்தார்.

அந்தோ கொடுமை! வன்னிப் பெரு நிலப் பரப்பில் அரச அராஜகத்தால் பல்லாயிரக் கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நிலையில் – ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வேளையில் – வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களின் அத்தனை சொத்துக்களும் உடைமைகளும் பரிநாசமாக்கப்பட்ட சூழமைவில்; இந்த நாட்டின் சிறுபான்மை இனமாகிய முஸ்லிம் அரசியல் தரப்புகள் அரசாங்கத்தின் அற்ப சொற்ப சலுகைகளுக்காக தமிழ் மக்களுக்கு எதிராக ஐ.நாவில் வாக்குமூலம் வழங்கியதைத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

நிலைமை இதுவாக இருந்த போதிலும் தமிழ் பேசும் ஆறு அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டும்.

அதேவேளை அவற்றின் ஒற்றுமை என்பது **"ஒற்றுமைப்பட வேண்டும்"** என்பதற்கானதாக இருந்தால், அந்த ஒற்றுமை நீண்டு நிலைக்காது.

மாறாக, ஆறு கட்சிகளினதும் ஒற்றுமை சிறுபான்மை மக்களின் நலன் சார்ந்ததாயின், அந்த ஒற்றுமைக்கு இயற்கையின் ஆசீர்வாதம் நிச்சயம் கிடைக்கும். ஆகையால், எதற்கும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றிணைவு அரசாங்கத்தின் பலவீனம் அல்ல

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட 6 பிரதான அரசியல் கட்சிகள் உடன்பாடுகளை எட்டியுள்ளமை மற்றும் எதிர்க்கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகள் என்பன அரசாங்கத்தின் பலவீனத்தால் உருவானவை அல்ல.

எதிர்க்கட்சியினரை ஒன்றிணைத்து வழிநடத்துவது எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்பாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த ஒன்றிணைவின் பின்னணியில் அரசாங்கம் இருப்பதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை நாம் முழுமையாக நிராகரிக்கிறோம். எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஒன்றிணைந்து பயணிக்க முடியாமல், வெவ்வேறு பெயர்களில் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்துவது குறித்து எங்களிடம் கேள்வி எழுப்புவதில் எந்த அர்த்தமும் இல்லை.

ஆளுங்கட்சியிலோ அல்லது எமது தரப்பிலோ ஏதேனும் பிளவுகள் ஏற்பட்டிருந்தால் அது குறித்து எங்களிடம் கேள்வி எழுப்புவது நியாயமானது.

பாராளுமன்றத்தில் எமக்கு 159 உறுப்பினர்களுடன் கூடிய பலமான பெரும்பான்மைப் பலம் உள்ளது. அதனைக் கொண்டு நாம் எமது பணிகளைச் சரியாக முன்னெடுத்து வருகிறோம்.

ஆனால் எதிர்க்கட்சியில் உள்ளவர்களை ஒன்றாகத் தக்கவைத்துக்கொண்டு, அவர்களை வழிநடத்துவது எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்பாகும்.

அவரோடு இணைந்து செயற்பட முடியாமல் தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்வாறு மேலும் மேலும் பிரிந்து செல்கிறார்களா என்பது எங்களுக்குத் தெரியாது. அது அவர்களின் உள்வீட்டுப் பிரச்சினையாகும்.

தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கம் தீர்வு வழங்காது என்றோ, அல்லது அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்ப்பு அலை உருவாகியதன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் இவ்வாறு ஒன்றிணைகிறார்கள் என்றோ கூறுவது முற்றிலும் தவறான கருத்தாகும் என்றார். (ம-7)

## நீர்கொழும்பு சிறை வன்முறை

# துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரிக்கு இடமாற்றம்

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட பயங்கர மோதலைக் கட்டுப்படுத்துவதற்காக துப்பாக்கிச்சூடு நடத்திய சிறைச்சாலை அதிகாரி, பல்லேகல சிறைச்சாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான ஏ.சி.கஜநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூலை 6 ஆம் திகதி நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்தின் போது, கைதிகள் சிறைச்சாலையின் இறுதி மரக்கதவையும் உடைத்துக் கொண்டு வெளியே வர முயன்ற சந்தர்ப்பத்தில், சிறைச்சாலை அதிகாரி ஒருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில், சிறைச்சாலைக்குள் இருந்த கைதிகள் குழுவொன்று சிறைச்சாலை அதிகாரிகள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளமை தெரியவந்ததுடன், அந்தச் சந்தர்ப்பத்தில் நிலைமையைக் கட்டுப்படுத்தவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவுமே இந்த அதிகாரி துப்பாக்கியைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூடானது சிறைச்சாலை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே நடத்தப்பட்டதா? அல்லது அதிகார வரம்பை மீறிச் செயல்படப்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிவதற்காக தற்போது ஒரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த கொடூரமான மோதல் காரணமாக இதுவரை 10 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 31 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-7)

## நீரில் மூழ்கி மரணித்த

# பொலிஸ் விசேட அதிரடிப்படை வீரருக்கு பதவி உயர்வு

(திருகோணமலை)

கின்னியா பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யச் சென்றபோது ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சார்ஜன்ட்டுக்கு உப பொலிஸ் பரிசோதகர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையின் கந்தளாய் முகாமில் கடமையாற்றி வந்த பொலிஸ் சார்ஜன்ட் டிபி.ரணசிங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 12 ஆம் திகதி கின்னியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோரைக் கைது செய்யச் சென்றிருந்தார். இதன்போது மஹாவலி கங்கையின் நீர்ரோட்டத்தில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கடமையின் போது விபத்தில் உயிரிழந்த குறித்த அதிகாரியின் சேவையைப் பாராட்டி, அரச நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பொலிஸ் மா அதிபரால் இந்த விசேட பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

12 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்து உப பொலிஸ் பரிசோதகர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நாட்டுக்கு வருகை தந்த

# சுற்றுலாவிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்தைக் கடந்தது

ஜனவரி மாத தொடக்கத்திலிருந்து இதுவரை நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சம் என்ற எல்லையைக் கடந்துள்ளது.

இதற்கமைய கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 12ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நாட்டிற்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,217,956 ஆக பதிவாகியுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜூலை முதலாம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மட்டும் 71,383 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் இதுவரை வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளில் அதிகமானோர் இந்தியாவிலிருந்தே வருகை தந்துள்ளனர். அந்த எண்ணிக்கை 16,610 ஆகும்.

இரண்டாவது அதிகூடிய சுற்றுலாப் பயணிகள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து (பிரித்தானியா) வருகை தந்துள்ளனர் என்பதுடன் அந்த எண்ணிக்கை 7,296 ஆகப் பதிவாகியுள்ளது.

மூன்றாவது அதிகூடிய சுற்றுலாப் பயணிகள் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். அந்த எண்ணிக்கை 4,656 ஆகும்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காலநிலை மாறி ஆபத்தாகும் நிலை! தயாராக இல்லாதுவிடின் பாதிப்பு அதிகமே!

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இனிவரப்போகும் மாதங்கள் எதிர்பார்த்திராத இயற்கை பேரிடரை கட்டியங்கூறி நிற்கின்றது. பல முனைகளிலிருந்து இந்த அறிவிப்புக்கள் பரவலாக வந்து கொண்டிருக்கின்றன. காலநிலை மாற்றம் பாரியளவில் உலக நாடுகளில் உணரத் தலைப்பட்டு விட்டது. பரவலாக மக்கள் காட்டுத்தீ, பெருவெள்ளம், நிலச்சரிவு, என இயற்கை அனர்த்தங்கள் பலவற்றுக்கு முகங்கொடுக்கத் தொடங்கி விட்டனர்.

இவ்வாறான நிலைமைகள் அவ்வப் போது பலநாடுகளில் நடைபெற்றாலும் தற்போது வரப்போகும் பேரிடரை அனுமானிக்க முடிவதோடு அதற்கான பாதுகாப்பு மற்றும் முன்னாயத்தங்களை நாம் ஏற்படுத்தாவிட்டால் விளைவு விபரீதமாகிவிடும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறியிருக்கின்றனர். இயற்கையின் அனர்த்தம் எமக்கு ஏற்படுத்தப்போகும் பாரதுாரமான விளைவுகளுக்கு முன்னால் வருமுன் காப்போம் என்னும் நிலைக்குள் நாம் அவசியம் வந்தாக வேண்டும். இக்கட்டுரையில் வரப்போகும் பேரிட ரைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உலர்வலயத்தில் ஜுலையிலிருந்து செப்ரெம்பர் வரை வரட்சியான காலப்பகுதியும் பின்னர் ஒக்டோபரிலிருந்து நவம்பர் மாதம் வரை அதீத மழையும் (வெள்ளப் பெருக்காக மாறலாம்) அதன் பின்னர் டிசம்பரிலிருந்து அடுத்த ஆண்டு பெப்ரவரி வரையும் வடகிழக்கு பருவக்காற்றின் மாறுதலால் ஏதிர்பாராத வெள்ளமும் பின்னர் மார்ச் இலிருந்து ஏப்ரல் வரை மீண்டும் வறட்சியான காலப் பகுதியுமாக மாற்றங்கள் நடைபெற இருப்பதாக காலநிலை அவதானிப்பு நிலையம் எதிர்வுகூறியிருக்கின்றது. வடபகுதிக்கு செப்ரெம்பர் வரையான காலத்தில் வறட்சியான வெப்பஅலை வீசும் காலநிலையாக எதிர்வு கூறப்பட்டிருக்கின்றது.

அதன் பின்னர் எமக்கு கிடைக்கின்ற வடகிழக்கு பருவக்காற்று காலபோகத்தில் அடைமழையாக அதீத மழையாக குறுகிய காலத்திற்குள் கொட்டித் தீர்க்கப்போகின்றதென மீண்டும் எச்சரிக்கை செய்திகளை விடுத்திருக்கின்றனர். வறட்சியான வெப்பஅலை வீசும் காலநிலையை ஓரளவு தாக்குப்பிடித்தாலும் வெள்ளத்தை தாங்கும் சக்தி வடபுலத்திற்கு குறைவு.

அதிலும் யாழ்ப்பாணம் வெள்ள நீர்வடிந்தோடும் பகுதிகளில் ஏலவே கட்டடங்களும் அதை தவிர்த்து பாதை காப்பெற்றாக மாறியபோதும் அதன் பின்னரும் வெள்ளம் வழிந்தோடும் கால்வாய்கள் செப்பனிடப்பட்டும் இருந்தாலும் எம்மக்களின் எதேச்சையான நடவடிக்கைகளால் அநேகமாக வடிகால்களில் குப்பைகள் போடப்பட்டு வெள்ளம் வடிந்தோட தடையாகவே இருக்கப்போகின்றது. கொஞ்சமேனும் இங்கிதமில்லாத மக்கள் என வடிகாலமைத்தவர் ஆதங்கப்பட்டார். இதனால் எமக்கென்ன என ஒரு கிண்டல் பார்வையும் எக்காளத்தனமும் இருப்பதாக வயதானவர் கவலைப்பட்டார்.

அடைமழை குறுகிய காலத்துள் பெய்தால் வெள்ள அனர்த்தம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். நீர் வழிந்தோடாது தேங்க முற்பட்டால் பயிர்செய்யும் நிலங்களுடன் அவரவர் வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் புக எத்தனிக்கும். நிஷா புயலின் போது பட்ட அவஸ்தையை கொஞ்சமேனும் கவனத்தில் எடுத்துக் கொண்டால் இங்கு சொல்ல வருகின்ற செய்தியின் சாராம்சம் புலப்படும்.

எதையுமே அலட்சியப்படுத்தும் நோக்கமுடையவர்களாக நாம் மாறியதிலிருந்து இனி வரப்போகும் இயற்கையிடரின் அகோர தாண்டவத்தை முன் கூட்டியே அனுமானித்தும் அதனை மக்கள் அனைவரும் அறிந்து தம்மை இவ்விடரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் இவ் அறிவித்தலை கருத்திலெடுத்ததாக தெரியவில்லை. இதை வாசிப்பவர்கள் நண்பர்களிடம் தெரிந்தவர்களிடம் வரப்போகும் பேரிடர் பற்றி விளக்குங்கள். ஒருவரின் உயிரைக் காப்பாற்றுவது இறை செயலாகும்.

பயிர்செய் நிலத்தில் பாரதுாரமாக நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என வெளிப்படையாகவே எச்சரித்திருக்கின்றார்கள். முன்னதாக வெப்பநிலை அதிகரிப்பதால் நிலத்தடி நீர் மற்றும் நீரேந்தும் பிரதேசங்களில் விரைந்து நீர் வற்றிவிடும் அதேநேரத்தில் அதீத மழை பெய்தால் வெள்ளநிலைமை ஏற்பட்டு விளைவித்த பயிர்களும் அழிவுக்குள்ளாகி விடும். விளைச்சலை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தும் வழிகளும் கணிசமானளவில் குறைவாகவே உள்ள நிலையில் செயற்கையான உணவுத் தட்டுப்பாடு வரக்கூடிய சாத்தியக்கூறுகளும் ஆராயப்பட்டுள்ளன.

சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் இதுபற்றி பல எதிர்வு கூறப்பட்ட தகவல்கள். அனைவரையும் கலக்கமடைய வைக்கும் செய்திகள். பிறநாடுகளில் நடக்கும் இயற்கை பேரனர்த்தங்கள் பற்றிய ஒளிப்படங்கள் முகப்புத்தகங்கள் மற்றும் வாட்ஸ்அப் என்னும் வலைத்தளங்களில் வந்த வண்ணமே இருக்கின்றன. ஆனால் நாம் எதிலும் கலக்கமடையாமல் அன்றாட பணிகளிலேயே கவனமுடையவர்களாக இருக்கின்றோம். என்ன நடந்து விடப்போகின்றது என்னும் அசாத்திய துணிச்சல். உள்நாட்டுப் போருக்குள் காணாததையோ இப்போது காணப்போகின்றோம் என்ற ஒரு அலட்சியப் போக்கு. அந்தக்காலம் வேறு இந்தக்காலம் வேறு. அது மனிதனால் வந்தது இது இயற்கையால் வரும் பேரிடர். எந்த வகையிலும் கவனமின்றியிருந்தால் தப்பிக்கவே முடியாது. இதைவிட எப்படி எழுதினால் பேசினால் எம்மக்களுக்கு உறைக்கும் என்று தெரியவில்லை. எதுவுமே சாத்திய மில்லை என்றாகி விட்டது.

அன்றைய தின விடயத்திலேயே கண்ணாயிருக்கும் மெத்தமனம் இது. எதுவும் வந்தால் தானே புரியும். அதுவரைக்கும் அலட்சியமான போக்கே மிஞ்சி நிற்கும். வருமுன் காப்போம் என்பது இப்போதெல்லாம் எடுபடுவதேயில்லை. வேறு ஏதாவது சொல்லுங்கள் என்கின்றார்கள். ஏனென்றால் இதையே கேட்டு கேட்டு சலித்து விட்டதாம்.

விஞ்ஞான ரீதியாக காலநிலையில் ஏற்படும் மாற்றத்தை எல்நினோ (EL nino) என பெயரிட்டுள்ளனர். சாதாரண வெப்பநிலை பாரியளவில் அதிகரிப்பதுடன் காற்று வெப்ப அலையாக வீசுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை பொத்துவில் பகுதியில் அதிக வெப்பமாக 38 பாகை செல்சியஸ் பதிவாகியிருக்கின்றது. இந்த வெப்பநிலை உயர்வு கடந்த ஆண்டுகளில் இலங்கையில் உணரத் தலைப்பட்டாலும் இந்த ஆண்டு முதல் இதன் தாக்கம் இன்னும் இன்னும் அதிகமாகவே உணரத் தலைப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியிருக்கின்றது. எகிறப் போகும் வெப்பநிலை தாங்க முடியாதளவுக்கு இருக்கும் அதனுடன் வெப்பஅலையாக காற்றும் வீசப் போகின்றது.

வெற்றுடல் மட்டுமல்ல வெப்பநிலை அதிகரித்த நிலையில் வெளியில் நிற்பவர்கள் அல்லது பயணிப்பவர்களுக்கு இது சிரமமாகவே இருக்கும். அன்றாட வேலைகளை முழுமையாக செய்ய முடியாத நிலை ஏற்படலாம். அதிகரித்த வெப்ப நிலையிலிருந்து விலகி நிற்கவே அனைவரும் விருப்பப்படுவர். நிழலை நோக்கியே இனி எமது பயணம் இருக்கப் போகின்றது.

செப்ரெம்பர் மாதம் வரை இந்த அதிகரித்த வெப்பநிலையென்றால் அதற்குப் பிறகு அதிகரித்த மழை வீழ்ச்சி என கணித்துள்ளனர். கொட்டித் தீர்க்கப்போகின்ற மழை வெள்ளமாக உருவெடுக்கும் நிலையேற்படும். வெள்ளம் வழிந்தோட அனைத்து கழிவு வாய்க்கால்களும் சுத்தமானதாக இருக்க வேண்டும்.






பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வடமாகாணத்துக்கென காலநிலை அவதானிப்பு கற்கை, ஆராய்ச்சி, எதிர்வுகூறல்கள் (Coordinating Centre for Climate forecasting, studies and research) என அனைத்தையும் துல்லியமாக கணித்து மக்களுக்கு அவ்வப்போது அறிவிக்கும் நிறுவனக் கட்டமைப்பு அவசியம் என பலமுறை எடுத்துக் கூறியிருந்தாலும் இங்கு அதனை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இது சார்ந்த பொறுப்புண்டு. பல்கலையின் பலதுறைகள் இணைந்து தேசிய காலநிலை அவதான நிலையம் விவசாய கால்நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடித்துறை ஆகியனவற்றின் இணைப்புடன் இந்நிறுவனக் கட்டமைப்பு உருவாக்கம் பெற வேண்டும்.

மாநகர பகுதிகளில் கழிவு வாய்க்கால்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டுள்ளதால் அதனுாடாக வெள்ள நீரும் கழிவு நீரும் வழிந்தோடும் என்னும் நினைப்பில் நாம் இருக்கின்றோம். ஆனால் எவ்வளவோ நிதியில் கட்டப்பட்ட கால்வாய்கள் குப்பை போடும் இடமாக பல இடங்களில் இரு ப்பதால் முதலில் குப்பை அகற்றப்பட வேண்டும். பின்னரே நீர் வழிந்தோடும் நிலைமை ஏற்படும். அந்த நேரத்தில் யார் இதனை செய்யப் போகின்றார்கள். வெள்ளம் அளவை மீறினால் குடியிருப்புக்களுக்குள் வந்தேறிவிடும்.

தாழ்வான பகுதிகளில் மனைகளை அமைத்திருப்பவர்கள் மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம். வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் விளைநிலமும் பாழ். குடியிருப்பும் பாழ். ஆதலினால் முன்னெச்சரிக்கை செய்திகளை அலட்சியம் செய்யாது உங்கள் உயிரை காப்பாற்றும் வழிவகைகளை அறிந்து அதன்படி செயற்படுங்கள். ஏனெனில் இழப்பை சர்வ சாதாரணமாக கடந்து சென்றவர்கள் என்ற மெத்தனப் போக்கு உடைய மக்களைக் கொண்டிருக்கின்ற சமூகமிது. இவ்வாறான பேரிடர்களில் உயிர்ச்சேதங்கள் கூட ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிகின்றது. உணவுப் பற்றாக்குறை செயற்கையாக ஏற்பட்டாலும் கூட குறிப்பிட்ட காலப்பகுதியில் இடர்ப்பட நேரிடும். சிறந்த திட்டமிட்ட பொறிமுறைக்கூடாக இப்பேரிடரை எதிர்கொள்ள நாம் அனைவரும் தயாராவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 200 பேரிடம்...

சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய (14) ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை முன்னெடுக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் முப்படை அதிகாரிகள் அடங்கிய விசேட விசாரணைக் குழுவும், அதனுடன் 7 தனித்துவமான விசேட விசாரணைக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

வன்முறையில் ஈடுபட்டவர்களால் சிறைச்சாலையின் சிசிடிவி கமராக்கள் சேதப்படுத்தப்பட்டிருந்தாலும், அவற்றின் DVR பதிவுக் கருவிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) தொழில்நுட்பப் பிரிவில் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

## புற்றுநோயாளர்...

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, மரணப் படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ வசதியுடன் கூடிய தான நோயாளர் விடுதி தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மனிதநேயத்திற்கான பாலம் எனும் அமைப்பினால் சுமார் 03 கோடி ரூபாய் நிதியில் முதற்கட்டமாக அமைக்கப்பட்ட விடுதியின் ஒரு பகுதியை இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மேத்யூ டக்வொர்த், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீபவானந்தராஜா, அவுஸ்திரேலியா பாலம் அமைப்பின் பணிப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு திறந்து வைத்துள்ளனர்.

இறப்பிற்கு முன் தமது இறுதிக் காலத்தினை மருத்துவ உதவியுடன் கழிப்பதற்காக மருத்துவர்களின் பரிந்துரையுடன் கூடிய இந்த விடுதியில், யாழ்.மாவட்டத்தில் எந்த பகுதியில் உள்ளவர்களும் இவ்வசதியைப் பயன்படுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## பிரதமர் ஹரிணி...

பிற்பகல் கட்டார் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

இந்த விஜயத்தின்போது, முன்னாள் அமீரின் மறைவு குறித்து இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாக பிரதமர் தனது உத்தியோக பூர்வ இரங்கலைத் தெரிவிக்கவுள்ளார்.

மேலும் இந்த விஜயமானது இலங்கை மற்றும் கட்டார் நாடுகளுக்கு இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் கருதப்படுகிறது. (ம-7)

## எத்தனை...

களின் புதிய கூட்டுத் தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டணி என்பது, அது வெறும் கூட்டு சாம்பாராக மாறும் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை என்பது மக்களுக்கு தெரிந்த விடயம்.

இந்தக் கூட்டணி இந்த நாட்டில் இலஞ்சத்தை ஒழிப்பதற்காக, மோசடிகளை ஒழிப்பதற்காக , திருடர்களைப் பிடிப்பதற்காக, நல்ல வேலைகளைச் செய்வதற்கான கூட்டணியா? அல்லது திருடர்களைப் பாதுகாப்பதற்கும், வஞ்சகர்களைப் பாதுகாப்பதற்கும், ஊழல் மோசடிகளைச் செய்பவர்களை பாதுகாப்பதற்கான கூட்டணியா? என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இந்தக் கூட்டணியில் இருக்கின்றவர்களைப் பார்க்கின்ற பொழுது கடந்த காலங்களில் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு இன்றைக்குப் பிணையில் இருக்கின்ற நபர்கள் தான் அதிகமாக இருக்கின்றார்கள். அ[illegible] கிறவர்களுக்கு [illegible] எண்ணுவதைத் தவிர்க்க முடியாததாகிவிடும்,

அதனால், சிறைக்குச் செல்வதற்கு முதல் எதையாவது செய்து இந்த அரசாங்கத்தை வீழ்த்தலாமா? அல்லது அரசாங்கத்தை மாற்றலாமா? என்கிற முயற்சியில் ஈடுபடுகின்ற ஒரு போக்காகவே இதைக் காணக்கூடியதாக இருக்கிறது என்றார். (ம-7,33)

## சிறை உத்தி...

சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதியொருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்ற வழக்கு விசாரணை நடைபெற்றபோது, குறித்த நபரின் விளக்கமறியலை நீதிமன்று நீடித்து உத்தரவிட்டது.

அதனை அடுத்து விளக்கமறியல் கைதியை மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து சென்றபோது, குறித்த நபர் சிறைச்சாலை உத்தியோகஸ்தர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த சிறைச்சாலை உத்தியோகஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,33)

## பூநகரி...

அவரது நண்பரும் மோட்டார் சைக்கிளில் ஏ32 நெடுஞ்சாலை வழியாகச் சென்றுகொண்டிருந்த போது, பூநகரி பள்ளிக்குடா" சந்தியில் பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குறித்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

விபத்துத்தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,315)

## அகழ்...

செம்மணி மனிதப் புதைகுழியில் 3ஆம் கட்ட அகழ்வு பணிகள் 56 நாட்கள் முன்னெடுக்க நீதி[illegible] அனுமதி வழங்கியிருந்தது. 32 நாட்கள் அகழ்வு பணிகள் இடம்பெற்ற நிலையில், கடந்த 23ஆம் திகதியுடன் அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளில் 412 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 409 என்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 6248 — வெற்றி இலக்கங்கள்: T 7 3 0 8 3 5
அத சம்பத — T 0 8 3 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0823

சுப தவசக் — 2026.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0364 — தனுசு 06 08 11 — 9683

தன நிதானய — திகதி - 2026.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் - 2278 — T 03 21 35 48 T

மெகா பவர் — திகதி 14/07/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2596 — T 18 10 46 52 55

ஜய — 2026.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0516 — X 3 0 3 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4490 — சீட்டிழுப்பு திகதி 14.07.2026 — V 12 24 44 80

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.07.14 — சீட்டிழுப்பு இலக்கம் 1557 — கடகம் 08 27 40 59 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 14.07.2026 — வெற்றி வாரம் 0956 — J 9 2 4 1 5 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,007,758.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3222 — 25000 பணப் பரிசு 58586 — சீட்டிழுப்பு திகதி 2026.07.14 — செவ்வாய்க்கிழமை — 15 66 71 72 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,481,908.00

சனிதா — திகதி 14.07.2026 — வெற்றி வாரம் 5383 — 05 15 30 34 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,188,145.60 — 40186

சசிரி — வெற்றி வாரம் 1052 — 14.07.2026 — செவ்வாய்க்கிழமை — 08 15 40 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,153,520.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4934 — சீட்டிழுப்பு திகதி 14.07.2026 — செவ்வாய்க்கிழமை — 19 30 50 61 — விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,348,026.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — S 37 10 13 55 72 — 2398 — 14.07.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.315,814,310.00

அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 3048 — 2026.07.14 — 13 66 67 74 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,635,194.40


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தமிழீழ விடுதலைப்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் எப்போதும் அவர்களின் ஒட்டுமொத்த செயல்முறையிலுமே மிகவும் தந்திரமான செயற்பாடுகளையே முன்னெடுத்தனர்.

எனது தனிப்பட்ட கருத்துப்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்குத் தவறிய இடங்கள் மிகக் குறைவே. பிரதானமான தவறு என்னவென்றால், 2005 இல் ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடித்து, மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதியாக்கி தாமாகவே வம்பை விலைக்கு வாங்கியதாகும்.

அதேபோன்று தான் ரஜீவ் காந்தியின் படுகொலையும். இப்படி சில பாரதூரமான தவறுகள் அவர்களினால் செய்யப்பட்டன. ரணசிங்க பிரேமதாசவிடம் அவர்கள் தங்களது வழக்கமான ஏமாற்று வித்தையையே செய்தார்கள்.

இந்திய அமைதிப்படையை பிரேமதாச விரட்டினார். விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதாகக் கூறி வந்தார்கள்.

அதற்கு இடைப்பட்ட காலத்தில் ஆயுதங்கள் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணங்கள் பரிமாற்றப்பட்டதாக ஒரு கதை இருக்கிறது. அவர்கள் பலவீனமடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சமாதானத்தை முன்னிறுத்திச் செயற்பட்டே மீண்டும் பலமடைந்தார்கள்.

2009 இலும் அதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டார்கள். ஆனால், அதிர்ஷ்டவசமாக அது அவ்வாறு நடக்கவில்லை. ரணில் விகிகிரமசிங்கவையும் ஏமாற்றினார்கள்.

அது சம்பந்தமாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ "மை பெல்லி இஸ் வைட்"(My Belly is White ) என்று பெரிய புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தில் அனைத்து விபரங்களும் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## மணமகள் தேவை

1. பளை, 1987, சுவாதி, இந்து, MSc in structural engineering in Uk, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (49106)
2. வட்டுக்கோட்டை, இந்து, 1988, பூசம், Accounting and Finance, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (43522)
3. புங்குடுதீவு, இந்து, 1989, அத்தம், IT engineer, Germany citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (44263)
4. இணுவில், இந்து, 1990, அனுசம், cost engineer, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34984)
5. கந்தரோடை, இந்து, 1991, ரோகிணி, civil engineer, singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57742)
6. அளவெட்டி, இந்து, 1992, மகம், MSc in project Management, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54213)
7. நெல்லியடி, இந்து, 1993, பூரட்டாதி, Quantity Surveying, PhD, Lecturer Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58471)
8. மானிப்பாய், இந்து, 1996, திருவோணம், BSc in It, Software engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54424)
9. இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor Accountant, Norway citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (31506)
10. நீர்வேலி, இந்து, 1994, கேட்டை, Bachelor of Business administrate specialising in Accounting and finance, ACCA, PGDP, Intermediate staff Accountant, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57140)

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு. (C-6046)

S.Sharma J.P | 077 803 8193
www.thaalee.com | 077 539 3728


## சேவல் விற்பனைக்கு



விறாத்து சேவல்கள்
பெரிய சேவல்கள்
(1 kg 1600/=
1½மாத சேவல் குஞ்சுகள்
(ஒன்று 650/=), ஒருநாள்
ஊர்க்கோழிக்குஞ்சு 170/=
விற்பனைக்கு

077 332 2433
(2514) சுழிபுரம்


## கண்ணீர் அஞ்சலி



எமது தொழிற்சங்க பொருளாளரும் மாகாண
கட்டடங்கள் திணைக்கள படவரைஞருமாகிய
திரு.செ.சதானந்தன் மற்றும் வவுனியா
நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனை
தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.செ.சதாகரன்
ஆகியோரின் அன்புத் தந்தை

**அமரர் கதிரேசு செல்லத்துரை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வடமாகாணம்**
(2522)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மணப்பெண் தேவை

1. காரைநகர், இந்து, 1991, அனுஷம், Engineering university of peradeniya, Engineer, Singapore citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2. கிளிநொச்சி, இந்து, 1994, உத்திரட்டாதி, A/L, France citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
3. நயினாதீவு, வேலணை, இந்து, 1995, பூரட்டாதி, BSc(Hons), Electrical Engineering - university of moratuwa Electrical & Computer Engineering at wichita state (USA), Research Assistant, USA citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. வேலணை, இந்து, 1990, திருவாதிரை, Bachelors of information Technology - university of colombo, Business மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5. உரும்பிராய், இந்து, 1996, சித்திரை, BBA, Retail manager, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. யாழ்ப்பாணம், இந்து, 1988, உத்திரட்டாதி, MSc in advanced software Engineering, BSc Computer Software Engineering NEDP - university of moratuwa, Software Engineer, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. வண்ணார்பண்ணை - மானிப்பாய், இந்து, 1987, Chemical Engineering, masters of Business Administration in Finance (MBA), Team Lead Business Analyst for Leading, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8. கரவெட்டி, இந்து, 1984, விசாகம், BCA (Bachelor of Computer Application), Business, Uk citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9. நல்லூர், இந்து, 1983, கேட்டை, Accounting Degree, Accountant, canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. முல்லைத்தீவு, இந்து, 1986, சித்திரை, A/L commerce, Business, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

நீங்களும் உங்கள் அன்பான வாழ்க்கைத் துணையை பாதுகாப்பான முறையில் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. இலங்கைத் தமிழர்களின் திருமண சேவை. உள்நாடு மற்றும் வெளிநாடு வரன்களும் உண்டு. (2518)

Contact us via Whatsapp +94 77 632 3154
Email : aishwaryamaishwaryam64@gmail.com

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
18.07.2026

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AAI, AA2, AA3)
Qualification :- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களிலும் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
"New Syllabus" - Business Level
Qualification :- G.C.E A/L 3 Passes
(Medium - Tamil & English)

Further Details :- Jaffna College
Undergraduate Dept.
464, Hospial Road, Jaffna.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், கொமர்ஷல் வங்கி அருகில்)
021 222 3382 / 0774405917
(C-6045)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகில் 2 ½ பரப்புக் கொண்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

071 092 7844
(8046)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant க்கு Waiter, House Keeper, CookerS, Manager தேவை.

தொடர்புகளுக்கு :
076 830 3931
(8044)




## கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் நிர்வாகத்தின் பகிரங்க அறிவித்தல்

**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பதிவு இல. S.149/30.11.1962 மற்றும் HA/5/JA/226 (கே.கே.எஸ் வீதி, கொக்குவில்)**

எமது ஆலய கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி நிதி வசூலிப்பதற்கும் அசையும் அசையா சொத்துக்கள் சம்பந்தமாகக் கடிதப் பரிமாற்றங்கள் செய்வதற்கும் அரச திணைக்களங்களுடனும் பொதுமக்களுடனும் தொடர்பு கொள்வதற்கும் 13.03.2025 ஆம் திகதிய ஆலய பிரமாணத்திற்கு அமையவும் அரச அதிகாரிகள் முன்னிலையில் பொதுச் சபை உறுப்பினர்களால் 14 பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவராக பி.குருபரனும் செயலாளராக செ.செல்வறஞ்ஜனும் தெரிவு செய்யப்பட்டனர். எமது ஆலயத்தின் கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி யாராவது நிதி சேகரிப்பதற்கோ எமது ஆலயத்தின் அசையா சொத்துக்களை பரிமாற்றம் செய்வதற்கோ அனுமதிக்கப்படவில்லை என்பதுடன் எமது கடிதத் தலைப்பை பயன்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்டால் அதனை ஏற்றுக்கொள்ளாது அதன் பிரதியை ஆலய பரிபாலன சபையினராகிய எமக்கு தந்து மோசடியைத் தவிர்க்க உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

பி.குருபரன் (தலைவர்) (8049) செ.செல்வறஞ்ஜன் (செயலாளர்)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media